Registered as a Newspaper

COMMERCE
வகுப்புக்கள்
88 Aug.
ஆரம்பம்:
1-02-86
சனி காலை 8 மணி
விபரங்கட்கு:
New Master
INSTITUTE
BMC Lane, Jaffna.

உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

COMMERCE
வகுப்புக்கள்
88 August
பொருளியல் - திரு. குமாரவேல்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
வர்த்தகம் - திரு. ஜெயராமன்
இந்து நாகரிகம் - திருமதி அருள் நங்கை
அளவையியல் - திரு. சந்திரராசா
தமிழ் - திரு. பாலா
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு தை மீ உ 21 திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 23 (03.02.1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-66

பண்டாரியின் விஜயம் திடீர் ஒத்திவைப்பு

கூட்டணி யோசனைக்கும் அரசின் பதிலுக்கும் இடையில் நீண்ட இடைவெளியாம்!

—உதயன் பிரதம செய்தியாளர்—

யாழ்ப்பாணம், பெப்.3

இன்று இலங்கை வரவிருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு.ரொமேஷ் பண்டாரியின் விஜயம் திடீர் என்று ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

கூட்டணியினரின் மாற்று யோசனைகளுக்கும், அரசாங்கம் அளித்த பதிலுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருப்பதே அதற்குக் காரணம் எனப் புதுடில்லியில் அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்ததாக அறியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளுக்கு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்கும் பட்சத்திலேயே திரு. பண்டாரி இலங்கை வருவார்என்றும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை அரசின் பதிலில் இந்தியா பலத்த ஏமாற்றம் அடைந்ததன் எதிரொலியே, பண்டாரியின் விஜயம் கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

கூட்டணியின் மாற்று யோசனைகளை சாதகமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

அப்பாவித் தமிழர் கொல்லப்படுவதற்கு முற்றுப்புள்ளி வேண்டும்

சென்னை, பெப். 2

அப்பாவித் தமிழர் (சிவிலியன்கள்) கொல்லப்படுவதற்கு முற்றுப் புள்ளி வைப்பதுதான் இன்று உள்ள முக்கிய விஷயம்.

இப்படி வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. பண்டாரி இன்று (ஞாயிறு) விமான மூலம்

(4-ஆம் பக்கம் பார்க்க)

முக்கிய அம்சங்கள் அத்தனையும் "அவுட்" அரசாங்கத்தின் பதிலில்

யாழ்ப்பாணம், பெப். 3

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட பல முக்கிய அம்சங்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டது.

* இந்தியாவில் உள்ளது போன்று சமஷ்டி ஆட்சி அமைப்பின் பல மாநிலங்களை நிறுவுவது,
* ஒவ்வொரு மாநிலத்துக்கும் முதலமைச்சரை நியமிப்பது,
* காணி, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு ஆகியன சம்பந்தமான நிறைவேற்று அதிகாரங்களை மாநில சட்டசபைகளுக்கு வழங்குவது,
* வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு தமிழ்மொழி மாநிலமாகப் பிரகடனப்படுத்துவது

இக் கோரிக்கைகள் கூட்டணியின் மாற்று யோசனைகளில் வலியுறுத்தப்பட்டிருந்தன.

இவை அனைத்தையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் பெண் வில்லிஸை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்க ஈரோஸ் தயார்

சென்னை, பெப். 2

கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண் வில்லிஸை சர்வதேசச் செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக ஈரோஸ் அறிவித்துள்ளது.

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமும் இலங்கை வந்து அவரைப் பொறு ஏப்புற்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது

பிரிட்டிஷ் அதிகாரிகளும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இதற்காக இலங்கை வருவதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை.

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்), பிரிட்டிஷ் பெண்ணை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஏற்கனவே அறிவித்து விட்டது—

என்றும் 'இந்து' செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வில்லிஸின் பேட்டி 4 ஆம் பக்கத்தில்)

24மணி நேர ஊரடங்கு மலையகத்தின் பல பகுதிகளில்

கொழும்பு, பெப். 3

நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்தலாவை, மஸ்கெலியா, நோர்வூட் ஆகிய பொலீஸ் பிரதேசங்களில் 24 மணி நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்று காலை 6 மணி முதல் நாளைக் காலை 6 மணி வரை இந்த ஊரடங்கு அமுலில் இருக்கும்.

முன்னைய அறிவித்தலின்படி ஹட்டன் பிரதேசத்தில் நேற்றிரவு 9 மணிக்கே ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வந்துவிட்டது. அங்கு 33 மணி நேரத்தின் பின் நாளைக் காலை 6 மணிக்கு சட்டம் தளர்த்தப்படும்.

வவுனியாவில் கைதான 450 இளைஞர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை

வவுனியா, பெப் 3

வவுனியாவில் ஆயுதப் படையினர் கடந்த சில நாட்களாக முகமூடி இளைஞர்கள் சிலரைத் தங்களுடன்அழைத்துச்சென்று பெரும்எண்ணிக்கையான மாணவர்கள் உட்பட சுமார் 450இளைஞர்களைக் கைதுசெய்திருக்கிறார்கள்.

இவர்கள் எவரும் இது வரை விடுவிக்கப்படவில்லை.

இதேவேளைநேற்று வவுனியா நகரிலும், பழைய பொலீஸ் நிலையப் பகுதியிலும் நடைபெற்ற தேடுதல்களின் போது 10பேர் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது

★ மலையகத்தில் வன்செயல் பரவுகிறது

சிங்களவர் குடியேற்றம் தாக்கப்பட்டது

—கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர்—

கொழும்பு, பெப். 3

பொகவந்தலாவை, டிக்கோயா, ஹட்டன், நோட்டன் பகுதிகளில் நேற்றும் வன்செயல்கள் நடந்தன. அங்கு தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது.

பொகவந்தலாவையில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களின் 7 கடைகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. உடைமைகள் கொள்ளை போயின.

இரண்டு வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டன.

பெரும்பான்மை சமூகத்தினரின் குடியேற்றம் ஒன்று தாக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில்பொலீஸார் துப்பாக்கிப்பிரயோகம்செய்ததில் தோட்டத் தொழிலாளி ஒருவர் பலியானார்.

டிக்கோயாவுக்கு அருகில் நடந்த மற்றொரு சம்பவத்தில் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார். தற்போது அவர் ஆபத்தான கட்டத்தில் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

நோட்டனில் கடந்த சனிக்கிழமை இரவு வீடு ஒன்றும் கடை ஒன்றும் தீக்கிரையாகின.

இந்தப்பகுதிகளில் நடமாட்டம் இல்லை. மக்கள் அஞ்சி வீடுகளில் ஒதுங்கியிருக்கிறார்கள். போக்குவரத்து ஏதும் இல்லை.

இதேவேளை இந்தச் சம்பவத்தினால் பெருந்தொகையானோர் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர். அகதிகளானோரில் அநேகர் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

நேற்று வன்செயல் நடைபெற்ற இந்தப் பகுதிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா, அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா, பொலீஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத், முப்படை கூட்டுத்தளபதி பிரிகேடியர் சிறில் ரணதுங்க ஆகியோர் விஜயம் செய்தனர்.

பிந்திய செய்தி

கொழும்பு, பெப். 3

ஹட்டன் பகுதியில் நேற்று இரவும் பல வன்செயல் சம்பவங்கள் நடந்ததாக பிந்தி வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பல இடங்களில் தீவைப்புச் சம்பவங்களும் தாக்குதல்களும் நடந்ததாகத் தெரிகிறது.

முச்சந்திமுரளி

பாவம் பண்டாரி கொழும்புக்கு வாறதுக்கு அடுக்கி வைத்த உடுப்புகளை விட்டு, இனி மாலைதீவுக்குப் போறதுக்கு ஏத்தாப் போலை மாத்த வேணுமாக்கும்.

தர்மபுரத்தில் 60 தமிழர் பலி?

புதைந்த வாகனங்கள் நேற்றும் மீட்கப்படவில்லை

— அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன் —

தர்மபுரத்தில் நேற்று ஆயுதப் படையினர் ஹெலிக்கொப்டர்கள், சிறுவிமானங்கள்மூலம் நடத்திய தாக்குதல்களில் 60 தமிழர் இறந்திருக்கலாம் என அஞ்சப்பட்டது.

ஆனால் இலங்கை வானொலி 15 தீவிரவாதிகள் தாக்குதலின்போது இறந்ததாக அறிவித்தது.

கிளிநொச்சிப் பகுதியில் தர்மபுரம், கல்மடு, இராமநாதபுரம், வட்டக்கச்சி ஆகிய இடங்களில் ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நேற்றுத் தொடர்ந்தும் கடும் சமர் நடைபெற்றதாக அறிய வருகிறது.

நேற்றையசமரில் 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் ஐந்து சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது

தர்மபுரப் பகுதியில் விமான, ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள், ஷெல் குண்டு வெடிப்புக்கள், பீரங்கி வேட்டுக்கள் ஆகியவற்றுக்கு சுமார் 60 தமிழர்கள் இரையாகியதாக அஞ்சப்படுகிறது.

கல்மடுவில் வாகனங்களை மீட்பதற்காக நேற்று கிளிநொச்சி முகாமிலிருந்தும் ஆனையிறவு முகாமிலிருந்தும் ஆயுதப் படையினர் அங்கு சென்றனர்.

பொதுமக்களை ஏற்றிச் சென்ற இ. போ. ச பஸ்களை படையினர் இதற்குப் பாவித்தனர்.

கிளிநொச்சி முகாமிலிருந்து நடைபவனியாக சுமார் 300 ஆயுதப்படையினர் கல்மடுவுக்குச் சென்றனர். இரண்டு ஹெலிக் கொப்டர்களும், இரண்டு சிறிய விமானங்களும் தாழப்பறந்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கின.

சிப்பாய் பட்டாளம் சென்ற வழிஎங்கும் வேட்டுகளைத் தீர்த்தவண்ணம் சென்றதாகக் கூறப்படுகிறது.

அநுராதபுரம், குருநாகல் பகுதிகளில் இருந்தும் 25க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் சிப்பாய்கள்சகிதம் கிளிநொச்சி வந்தடைந்தன, இந்தப் பட்டாளமும் பின்னர் கல்மடுவுக்கு அனுப்பப் பட்டது.

ஆயுதப்படையினர் கல்மடுவை நோக்கிச்சென்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி: இன்றும் ஊரடங்கு

யாழ்ப்பாணம், பெப். 3

கிளிநொச்சியில் இன்று காலை 10 மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கு நீக்கப்படும்.

பொலீஸ் நிலையம் நோக்கி வந்த மக்கள்

கொழும்பு, பெப். 3

பொகவந்தலாவை பொலீஸ் நிலையத்தை நோக்கி 2 ஆயிரம் பேர் கொண்ட சனக்கூட்டம் ஒன்று வன்செயல் புரியும் நோக்கில் வந்ததாகக் கூறப்படுகிறது.

பொலீஸார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டயைதடுத்துக் கூட்டம் கலைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சிறுவனுக்கு இந்தக் கதி கேளீர்!

யாழ்ப்பாணம், பெப்.3

'மரத்திலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த' கதை, இந்த நெருக்கடிக் காலத்திலும் மறைந்து போவதாக இல்லை.

கிளிநொச்சி ரயில் நிலைய பயங்கரத்தில் சிக்கிக் காயம் அடைந்த 5 வயது பாலகன் இந்த நிலைக்கு ஆளானான்.

யாழ். ஆஸ்பத்திரியில் இது நடந்தது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது;

கிளிநொச்சி ரயில் நிலையக் கோரச் சம்பவத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பாதிக்கப்பட்டனர்.

தாயும் ஒரு மகனும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினர்.

சூட்டுக் காயங்களுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

3.2.1986

திங்கட்கிழமை

சுபநேரம்:

12.35முதல் 2.05 வரை

ராகுகாலம்:

8.05 முதல் 9.35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி மாலை 6.12 வரை

★ முல்லைத்தீவில்

பீரங்கிக் கப்பல் மீது லோஞ்சர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 3

முல்லைத்தீவில் நேற்று ஏழாவது நாளாக போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் கடும் சண்டை நிகழ்ந்தது.

ஆயுதப்படை முகாமிலிருந்து பீரங்கி வேட்டுக்கள், மோட்டோ ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்தன.

நேற்று நண்பகல் முல்லைத்தீவு கடற் பிரதேசத்தில் மேலதிகமாக இரண்டு பீரங்கிக் கப்பல்கள் வந்து சேர்ந்தன

இவற்றை நோக்கி போராளிகள் றொக்கட் லோஞ்சர் மூலம் தாக்கியதாக தெரிகிறது.

இதனையடுத்து கடலில் நின்ற மூன்று பீரங்கிக் கப்பல்களில் இருந்து பயங்கரச் சத்தத்துடன் குண்டுகள் கரைப் பிரதேசத்தில் அடுத்தடுத்து தீர்க்கப் பட்டன.

அப்பகுதிகளில் கடற்கரைப் பிரதேசத்தில் சுமார் நான்கு மைல் தூரத்தில் மக்கள் எவரும் இருக்கவில்லை. வீடுகளை விட்டுச் சென்று விட்டனர்.

நேற்றைய சம்பவத்தில் சுமார் 20 பொதுமக்கள் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுச் சத்தங்களை விட வேறு சத்தங்களின்றியே முல்லைத்தீவுப் பகுதி அடங்கிப் போயிருக்கிறது.

மக்கள் உணவின்றிக் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாமுக்குச் செல்லும் தண்ணீர்க் குழாய் துண்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதனால் ஆயுதப்படையினர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரி கிணற்றிலிருந்து தண்ணீரைப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிய வருகிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடிக்க மட்டுமன்றி இயக்கவும் தெரியும்

பெருமைப்படுபவர் ஸ்ரீலலிதா

திரையுலகுக்கு குழந்தை நட்சத்திரமாக புகுந்து, இப்பொழுது பல மொழிப் படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார் ஸ்ரீ லலிதா.

குச்சுப்புடி நடனம், பரதநாட்டியம் போன்றவற்றிலும் இவர் சளைத்தவரல்லர். அது மட்டுமல்ல அவர் ஒரு நடன இயக்குநரும் கூடி.

ஸ்ரீ லலிதா சொல்கிறார்:

''நான் குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் நுழைந்தேன். எனது ஏழாவது வயதில் அந்த 'சான்ஸ்' கிடைத்தது. முதல் படம் 'மாணிக்கத் தொட்டில்'. அடுத்தது 'கைபிடித்தவள்'.

அதைத் தொடர்ந்து 'கன்னியா குமரி'(மலையாளம்), 'சாமுண்டீஸ்வரி மஹிமை' (தெலுங்கு) என்று வேற்றுமொழிப் படங்களிலும் நடிக்கத் தொடங்கினேன்.

வளர்ந்த பிறகு சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இளம் பராயத்திலேயே இருந்தது. பாரதிராஜாவின் 'வாலிபமே வா வா' படம் என் திரைப்பட வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

அதில், ராதாவின் தோழியாக நடித்த நான் தொடர்ந்து பாரதிராஜாவின் படங்களில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

நேதாஜி, 'உன்னை விடமாட்டேன்' படத்தில் எனக்கு வாய்ப்பளித்தார். அன்று முதல் இன்று வரை எனக்கு நல்லபெயர் தான்.

''நடித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். நடன இயக்குநராகவும் இருக்கின்றீர்களே! இது கஷ்டமில்லையா?'' என்று என்னிடம் சிலர் கேட்கிறார்கள்.

இரண்டும் எனக்குப் பிடித்தவை. இரண்டையுமே சிறப்பாகச் செய்ய என்னால் முடியும். அத்துடன் நற்பெயர் வாங்கமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

சமீபத்தில் நான் நடன இயக்குநராகச் செய்த படம் 'ஜனனி' இப்படத்தை இன்னொருவரின் உதவியே இல்லாமல் நான் மட்டுமே தனியாக நடனக் காட்சிகளை அமைத்ததைப் பலரும் பாராட்டினார்கள்'' என்றார்.

தினசரி சினிமா

★ உலக சந்தையில்

எண்ணெய் விலை திடீர் வீழ்ச்சி

ஒபெக் நாடுகள் கலக்கம்

வியன்னா, பெப். 3

உலகச் சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

மெக்ஸிக்கோ, வெனிசூலா ஆகிய நாடுகள் மசகு எண்ணெய்யின் விலையை ஒரு பீப்பாய்க்கு 4 டாலர்கள் வீதம் குறைத்திருக்கின்றன.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஸ்தாபனத்தின் (ஒபெக்) உறுப்பு நாடுகளில் வெனிசூலாவும் ஒன்று.

இந்தோனேஷியாவும் எண்ணெய் விலையைக் குறைக்க உத்தேசித்துள்ளது.

நாட்டு நலனைக் கவனிப்பதே எனது முதல் கடமை என்று இந்தோனேஷிய எண்ணெய் அமைச்சர் அறிவித்துள்ளார்.

எண்ணெய் விலை மளமள என்று வீழ்ச்சி அடைந்து வருவது குறித்து எண்ணெய் உற்பத்தி நாடுகள் கலக்கம் அடைந்து உள்ளன.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலை குறித்து ஆராய்வதற்காக ஒபெக் ஸ்தாபனம் அவசர அவசரமாகக் கூட்டம் ஒன்றை கூட்டுகிறது.

வியன்னாவில் இன்று திங்கட்கிழமை இந்தக் கூட்டம் நடைபெறும்.

உண்மை, அகிம்சை வழியில் வாழ்ந்து அமைதி, நீதி நிலைநாட்டலாம்

புதுடில்லியில் பாப்பரசர்

புதுடில்லி,பெப் 1

காந்தி அடிகள் கூறியது போன்று உண்மை,அகிம்சை வழிவாழ்ந்தால்தான் அமைதியையும், நீதியையும் நிலைநாட்ட முடியும்.

இப்படி பரிசுத்த பாப்பரசர் புதுடில்லியில் காந்திஜி சமாதி அருகில் வைத்துச் சொன்னார்.

பரிசுத்த பாப்பரசர் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

அவரை ஜனாதிபதி ஜெயில் சிங், பிரதமர் ராஜீவ்காந்தி ஆகியோர் வரவேற்றனர்.

''பாரதம் பல மதங்களின் பிறப்பிடம்; வேறு சில மதங்களின் இல்லம். ஆகவே பாப்பரசரை வரவேற்பதில் பாரத மக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்''—இப்படி ஜனாதிபதி ஜெயில் சிங் சொன்னார்.

சமத்துவம், மனிதகுல கண்ணியம் ஆகியவற்றை பேணும் இலட்சியத்துடன் பாரதம் பணிபுரிவதாகப் பாப்பரசர் சொன்னார்.

காந்திஜியின் சமாதிக்கு சென்று பாப்பரசர் அஞ்சலி செலுத்தினர்.

மனித உரிமைகள் விடயத்தில்

றேகன் நிர்வாகம் அரசியல் லாபம்

வாஷிங்டன் பெப். 2

றேகன் நிர்வாகம் மனித உரிமைகளைப் பேண எடுத்து வந்த நடவடிக்கைகளை தனது அரசியல் லாபத்துக்கும் பயன்படுத்தியது. இப்படி அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு சம்பந்தமாக நியமிக்கப்பட கண்காணிப்புக் குழுவே தனது அறிக்கையில் இதைத் தெரிவித்தது.

தென் ஆபிரிக்கா, சிலி, பிலிப்பீன்ஸ் நாடுகளில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்டித்த றேகன் நிர்வாகம்,

ஆப்கானிஸ்தான், நிக்கராகுவா நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை தனது அரசியல்லாபத்திற்காகப் பயன் படுத்தியுள்ளது.

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் நெருங்க மார்க்கோஸ் தாராளம்

மணிலா, பெப். 2

8 லட்சம் அரச ஊழியருக்கு 10 சதவீத சம்பள உயர்வு அளிக்க பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினன் மார்க்கோஸ் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு வாரம் இருக்கையில் இந்த உத்தரவு வெளியிடப்பட்டு உள்ளது.

ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் விதத்தை அவதானிக்க 19 பேர் கொண்ட அரசுத் தூதுக் குழு ஒன்றை மணிலாவுக்கு அனுப்ப அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது. அமெரிக்க செனட்டின் வெளியுறவு கொள்கைக் கமிட்டித் தலைவர் இத்தூதுக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்.

வெளி உலகில்

அங்கோலா

கிளர்ச்சித் தலைவருடன் அமெரிக்க அரசாங்கம் பேச்சு

இராணுவ உதவி வழங்கும்

வாஷிங்டன், பெப்.2

அங்கோலாவின் கிளர்ச்சித் தலைவர் ஜோனஸ் சாவிம்பி அமெரிக்க அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவிடம் நிதி, இராணுவ உதவிகளை அவர் கோரியிருந்தார்.

இந்த உதவிகளை எந்த முறையில் வழங்குவது என்பதில் றேகன் நிர்வாகமும் காங்கிரஸும் முடிவெடுக்க முடியாதிருந்தன.

எனினும் அமெரிக்க அதிகாரிகளுடன் அவர் சென்ற மாதம் 30 ஆம் திகதி மேற்கொண்ட பேச்சுவார்த்தை பயனளிக்கலாமென நம்பப்படுகிறது.

அங்கோலாவின் இடதுசாரி அரசுக்கெதிராக கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்கா கூட்டாளியாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

றேகன் உறுதி

சிட்னி, பெப். 2

பெப்ருவரி 7இல் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமானதாகவும் நீதியாகவும் இருந்தால் கூடுதல் இராணுவ, பொருளாதார உதவிகளைப் பிலிப்பீன்ஸுக்கு அமெரிக்கா வழங்கும்.

ஒரு சவால்

வாஷிங்டன், பெப். 2

சலஞ்ஜர் விபத்தினால் அமெரிக்க அதிபர் றேகனின் நட்சத்திரப் போர் திட்டத்துக்கு ஆபத்து வந்துள்ளது.

நட்சத்திரப் போர் திட்டம் தாமதப்படுத்தப்படும் என்று அமெரிக்க அரசு வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

கெனடியின் ரஷ்ய விஜயம் தாமதம்

வாஷிங்டன், பெப்.2

செனட்டர் எட்வர்ட் கெனடியின் ரஷ்ய விஜயம் பின்போடப்பட்டு விட்டது.

அமெரிக்க விண்வெளிக் கலம்'சலஞ்ஜர்' வெடித்த சம்பவத்தை அடுத்தே இந்தப் பயணம் பின்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவரின் அடுத்த பயணம் எப்பொழுது மெற்கொள்ளப்படும் என்பதற்கான திகதி தெரிவிக்கப்படவில்லை.

மக்கள் முகம்

ஓய்வு பெற்றார்

சாவகச்சேரி, பெப். 3

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயமகாவித்தியாலய உதவி அதிபர் பண்டிதர். மு தம்பையா தமது 36 வருட ஆசிரிய சேவையின் பின்னர் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி இளைப்பாறினர்.

திரு. தம்பையா பத்து ஆண்டுகள் உதவி அதிபராக இருந்து வித்தியாலய வளர்ச்சிக்கு அருஞ் சேவை ஆற்றினர்.

மட்டுவில் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் தலைவராக பல ஆண்டுகளாக இருந்து வரும் இவர், அங்கு பண்ணிசை, திருமுறை வகுப்புகளையும் நடத்தி வருகிறார்.

நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ் நகர் 24 மனை செட்டியார் மகாஜன சங்கத்தின் பொதுச் சபைக்கூட்டம் 14-1-86 அன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ். வி. கருப்பையா செட்டியார், உப தலைவர்கள்: திரு. சி. கே இராமசாமி செட்டியார், திரு.ஈ. சின்னப்பன் செட்டியார், செயலாளர்: திரு. இரா. செல்வவடிவேல், பொருளாளர்: திரு. ஈ பஞ்சாட்சரம்.

15 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சியில் நடந்த ஊர்வலம்

கரவெட்டி, பெப். 3

வடமராட்சி பகுதியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பருத்தித்துறை சிவன் கோயிலிலிருந்தும் கரவெட்டி, சுவாமியன் அரசடியில் இருந்தும் ஊர்வலம் ஆரம்பமானது.

இதில் 2000 க்கும் மேற்பட்ட மாணவர்களும், பொதுமக்களும், கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகவும், 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை கண்டித்தும் இந்த ஊர்வலத்தை தேசிய மாணவர் மன்றம் நடத்தியது

காலை 9 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் பருத்தித்துறை சிவன் கோயிலில் இருந்து ஆரம்பமாகி, கிராமக்கோடு வழியாக, மந்திகை, மாலிசந்தி உதவி அரச அதிபர் பிரிவை அடைந்தது.

இதேபோல் மற்றொரு ஊர்வலம் கரவெட்டி சுவாமியன் அரசடியில் இருந்து ஆரம்பமாகி நெல்லியடி, வதிரி வழியாக மாலிசந்தி உதவி அரச அதிபர் பணிமனையை அடைந்தது.

உதவி அரச அதிபர் பணிமனையில் இரண்டு ஊர்வலங்களும் ஒன்றாக இணைந்தன. மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஊர்வலம் நெல்லியடியை அடைந்து பின் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

முன்மாதிரி

மானிப்பாய், பெப். 3

தமிழ் மக்களைக் காப்பாற்றும் நல்நோக்குடன் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களும், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும் ஒன்றிணைந்து இரத்த தானம் வழங்கியுள்ளனர்,

மானிப்பாய் மகளிர் கல்லூரியைச்சேர்ந்த ஐம்பதுக்கு அதிகமான மாணவிகளும், இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுமாக நாற்றுக்கணக்கான மாணவர்கள் சென்ற திங்கட்கிழமை இரத்தவங்கிக்கு தம்மால் முடிந்த அளவு இரத்தத்தை தானமாக வழங்கியுள்ளனர்.

உத்தியோகத்தர்

பருத்தித்துறை, பெப். 3

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் ஆறுவது ஆண்டு நிறைவு விழா அண்மையில்நடைபெற்ற போது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாக மீண்டும் தெரிவாகினர்.

தலைவர் திரு. ஏ. எஸ். அகஸ்தீன், பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற், பொருளாளர் திரு. எஸ். சி. பெர்னண்டோ.

மினி சினிமா

நவா மினி

(உஷா மினி முன்பாக)

★ புதிய வெளியீடு

The Dirty Dozen NEXT MISSION

வயது வந்தவர்களுக்கு மட்டும் முழுக்க, முழுக்க தாக்குதல் நிறைந்த மிகச் சிறந்த படம், முதன் முதலாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

பாடசாலை மாணவர்களுக்கு அடையாள அட்டை

விண்ணப்பங்களை அனுப்புமாறு அதிபர்களிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, பெப் 3

இந்த வருடம் க. பொ. த சாதாரண உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கான விண்ணப்பங்களை ஆள்பதிவு திணைக்களம் பாடசாலை அதிபர்களிடமிருந்து கோரியுள்ளது.

31- 12- 1985 ல் 16 வயதுடைய மாணவர்கள் அடையாள அட்டையைப் பெறலாம். அதற்குப் பின்பு 16 வயது பூர்த்தியடைவோர் மாதாந்தம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

உயர்தர பரீட்சை மாணவர்கள் 28-2-1986 க்கு முன்பாகவும்–

சாதாரண பரீட்சை மாணவர்கள் 31-3-1986 க்குமுன்பும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமெனவும் ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தற்கொலை

பல தடவை நஞ்சருந்தப்போவதாகக் கூறிவந்தவர் தமது சொல்லை இறுதியில் நிறைவேற்றினார். மது போதையில் நஞ்சருந்திய அவர் பரிதாபகரமாக மரணமானார்.

மாவிட்டபுரம் வாசியான மயில்வாகனம் சிதம்பரப்பிள்ளை என்னும் 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை என தீர்ப்பளித்தார்.

இன்று

யாழ்ப்பாணம், பெப். 3

ஜெருஸலம் அல்-அக்ஸா பள்ளிவாசலில் அண்மையில் இஸ்ரவேலர்கள் புரிந்த அட்டூழியத்தை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கும் கூட்டம் ஒன்றுஇன்று(திங்கள்) மாலை 6-30 மணியளவில் யாழ்நகரில் நடைபெறும்.

யாழ்-மானிப்பாய் வீதியில் உள்ள மொகிதீன் ஜும்மா பள்ளிவாசலில் உள்ள தீனியா மதலஸா கட்டடத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

பள்ளிவாசல் நிர்வாகிகளால் இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள்,மார்க்க அறிஞர்கள் கூட்டத்தில் பேசுவர்.

நாராயணதாசனின் பாடல்கள் தீர்க்காயுள் தரும்

நூல் வெளியீட்டுவிழாவில் உரை

வட்டுக்கோட்டை, பெப். 3

தெலுங்கிலே தியாகராஜர் கீர்த்தனைகளை தியாகராஜர் பாடியது போல தமிழிலே அருமையான பக்தி ரசக் கீர்த்தனைகளை திரு. கு. பொ. சிவகுருநாதன் (நாராயணதாசன்) பாடித் தந்துள்ளார். இக்கீர்த்தனைகளைப் பாடுவதனால் தீர்க்காயுளும் பாதுகாப்பும் எமக்கு உறுதிப்படுத்தப்படும்.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மண்டபத்தில் திரு. கு. பொ. சிவகுருநாதன் (நாராயணதாசன்) அவர்களது 'பஜனைக் கீதமணி' நூல் வெளியீட்டுப் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

தலைமையுரை நிகழ்த்திய சைவமணி, சிந்தாந்தச் செம்மல், வித்துவான் மு. சபாரத்தினம் மேற் கண்டவாறு கூறினார்.

திரு. சபாரத்தினம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

இன்றைய கால கட்டத்தில் கிருஷ்ணனின் பாதுகாப்பு எமக்குத் தேவை. எமது காவல் தெய்வமான பரந்தாமனின் புகழைப் பாடுவதனால் தீர்க்காயுளும் பாதுகாப்பும் எமக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

தும்பளையில் பிறந்த திரு. சிவகுருநாதன் இளமையிலே வல்லிபுரக் கோயிலுடன் தொடர்பு கொண்டு கண்ணனோடு ஈடுபாடுடையவரானார்.

பின்னர் உறவினரின் தொடர்பால் பொன்னாலைக்கு வந்து கடந்த 40 ஆண்டுகளாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளை தமது சிந்தையில் வைத்து பக்திக் கனியை தீந்தமிழில் குழைத்து அழகிய பக்தி ரசக் கீர்த்தனைகளாக இன்று வடித்துத் தந்துள்ளார்.

இக்கீர்த்தனைகளுக்கு தானே இசை அமைத்து இராகங்களுக்கேற்ப ஆலயத்திலேயே பாடிப்பாடி சிறந்த இசைநூலை-பக்தி நூலை இன்று எமக்குத் தந்துள்ளார்.

இந்நூலை சகல தமிழ் மக்களும் படித்து பயன் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் ... மயில்வாகனம் ... முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இடமாற்றம்

கொடிகாமம், பெப். 3

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் அ. த. க பாடசாலை அதிபர் திரு. க. துரைரத்தினம் சரசாலை ஸ்ரீகணேச வித்தியாசாலைக்கும் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலிருந்து திருமதி. சுப்பிரமணியம் கரம்பகம் பாடசாலைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

சமாதான சபை புரிந்த சாதனை

நல்லூர், பெப். 3

கோப்பாய் வடக்கு சமாதான சபையினர் இப்பகுதிகளில் நூறு புகார்களை விசாரித்து 91 புகார்களை சுமுகமான முறையில் தீர்த்து வைத்துள்ளனர்.

கோப்பாய் வடக்கு சமாதான சபையின் விசேட பொதுக்கூட்டம் அண்மையில் கோப்பாய் பாலர் விடுதியில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய திரு சி. இராசரத்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சபையின் சேவையைப் பாராட்டி ஆசிரியர்கள் திரு. சி.க.சுப்பிரமணியம், திரு. க. மார்க்கண்டு, திரு.செ செல்வரத்தினம், திரு. த. சிவஞானம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க அருணாசலம், சுழிபுரம் மிருக வைத்திய போதனாசிரியர் திரு. மா. மகாதேவன், இளைப்பாறிய அதிபர் திரு.க. கா. மதியாபரணம், திரு. க. ... நா, முருகையா அதிபர் ஆகியோர் ... மற்றும் பலரும் உரையாற்றினர்.

கொலைகளைப் புரிந்துவிட்டு மனநோயைச் சாட்டுவதா?

கிளிநொச்சி பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

கிளிநொச்சி, பெப். 3

கிளிநொச்சியில் சமீபத்தில் நடந்த அசம்பாவிதங்கள் குறித்து கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் பெண்கள், குழந்தைகள், உட்பட பதினொரு பேர் கொல்லப்பட்டது, 43 பேர் படுகாயம் அடைந்தது, திருநகர்ப் பகுதிக்கு கவச வாகனம் சென்று வீடுகளைச் சேதமாக்கியது ஆகியயை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் அதில் குறிப்பிடப்பட்டதாவது:- 83 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வந்த தனபதி என்ற உல்லாசப் பிரயாணி திஸ்ஸமகராமவில் சலூன் ஒன்றில் வைத்து கொல்லப்பட்டதுக்குக் காரணம் ஒரு மனநோயாளி.

அதேபோல் கடந்த வருடம் மே மாதம் அனுராதபுரத்தில் தஞ்சம் தேடிச் சென்ற தமிழர்கள் இராணுவ முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டதும் ஒரு மனநோயாளியால்தான்.

இதேபோன்று கிளிநொச்சி ரயில் நிலையக் கொலைகளுக்கும் ஒரு மனநோயாளியைக் குற்றம் சாட்டுவது எமக்கு புதிதல்ல.

இக் கொலைகளைச் செய்தவர் ஒரு மனநோயாளி என செய்தித் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்தோம். இதை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. இச்சம்பவத்தில் இறந்தவர்கள் பயங்கரவாதிகள் என இராணுவ அதிகாரிகள் அறிக்கை தராததையிட்டு மகிழ்ச்சி.

ஆகவே இக் கொலைகள் தொடர்பாக நியமிக்கப்படும் விசாரணைக் கமிஷனில் உயர் நீதிபதிகளை அல்லது எங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களை நியமிக்க வேண்டும்.

இச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவர்கள். படுகாயம் அடைந்தவர்கள் அனைவருக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

இவ்வாறு மகஜரில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

எல்லாக் கருமத்தையும் ஈசுவரனுக்கு அர்ப்பணமாகச் செய்ய வேண்டும் என்று பகவான் கீதையில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். ஆகையால் எப்பொழுதும் பிறருக்காக உழைக்க வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்ய வேண்டும்.

— காஞ்சி முனிவர் —

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
03-02-86 த. பெ. 23

ஒரே நேரத்தில் இரண்டு தீர்வுகளாம்!

தமிழ்ப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக நெருக்கடி நிலைமை கனங்கட்டி வருவதைக் காண முடிகிறது. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பெரும் பதற்றமான சூழ்நிலை உருவாகி விட்டது. முழு அளவில் இல்லாவிட்டாலும் ஆரம்ப கட்ட ''போர் மூண்ட'' ஓர் உணர்வை அந்த இடங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தொனிக்கின்றன.

இந்த ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறவும் உணவுக்கு வழியில்லாமல் கஷ்டப்படவும் வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியுள்ளது. அவற்றைத் தான் ஓரளவு சகித்துக் கொண்டாலும், எந்த நேரமும் உயிராபத்தை எதிர்நோக்கும் மிகப் பயங்கரமான நிலையும் உருவாகி இருக்கிறது.

இதற்குக் காரணம் யார்?

தாம் உரிமை இழந்தவர்களாக வாழக்கூடாது என்று 1956ஆம் ஆண்டளவிலேயே தமிழ் மக்கள் முடிவு செய்யத் தொடங்கினார்கள். உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமெனில் கஷ்டப்பட்டே ஆக வேண்டும் என்பதை அவர்கள் அப்போதே தெரிந்திருந்தார்கள்.

மேலும் கடந்த இரண்டொரு வருடங்களின்போது தாம் எதை எதையெல்லாம் தியாகம் செய்யவேண்டி வரும் என்பதையும் அவர்கள் அனுபவ ரீதியாக அறிந்து விட்டார்கள். அந்த அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் வேறு யாருமல்லர். அரசாங்கத்தினர் தான்.

அதனால், இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி, எப்போதோ ஒருக்கால் வரும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தது தான். நெருக்கடி வரும் காலம் அவர்களுக்குத் தெரியக்கூடிய சாத்தியமிருப்பின் நிராயுதபாணிகளான தமிழ் சிவிலியன்கள் தம்மைப் பாதுகாக்க தங்களால் இயன்ற எதையாவது செய்யச் சந்தர்ப்பம் இருந்திருக்கும்.

ஆனால் அரசாங்கம் அரசியல் தீர்வு, அதற்கான பேச்சுவார்த்தை என்றே கூறிக்கொண்டு நகக்கிடாமல் இராணுவத் தீர்வைக் காண முயல்கிறது.

ரயில் நிலையத்தில் நிற்பவர்களையும் வீதிகளில் தமது அன்றாட அலுவல்களைச் செய்ய நடமாடுபவரையும் வீடுகளில் இருப்போரையும் நிராயுதபாணிகளான சிவிலியன்கள் என்றும் பாராமல், தரையிலிருந்தும் வானத்திலிருந்தும் சுட்டுக் கொல்வதை இராணுவத் தீர்வு என்று கொள்ளாது அரசியல் தீர்வு என்று கொள்வது?

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்றால் அரசியல் தீர்வு; இராணுவத் தீர்வு என்றால் இராணுவத் தீர்வு என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்தியப் பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாது என்ற ''சின்ன'' விஷயம் இந்த நாட்டு ஜனாதிபதிக்குப் புரியாது இருப்பது பெரும் துரதிர்ஷ்டமே. இராணுவத் தீர்வு காணத் தொடங்கினால் எப்படி அரசியல் தீர்வுக்கு இடமிருக்கும்?

அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டு இராணுவத் தீர்வு காண்பது அநியாயம், அதர்மம். இதனைப் பௌத்த தர்மம் பேசும் ஜனாதிபதி புரிந்து கொள்ளாதிருக்கிறாரா? அல்லது விஷமத்தனமா?

அரசியல் தீர்வு காணும் போர்வையில் இராணுவத் தீர்வு காண்பது பெரும் பாரதூரமான விஷயமாகும். அப்படிச் செய்வது சரி என்று எந்த வெளிநாடு சொன்னாலும் அது இன ஒழிப்புக்கு உடந்தையானது என்று கருதலாம்.

அரசாங்கத் தலைவர்களதும் அவரது சகபாடிகளினதும் பேச்சுகளும் பேட்டிகளும் செயற்பாடுகளும் அவர்கள் அரசியல் தீர்வைப் பற்றிச் சிந்திக்கவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன.

இதற்கு மேல் யார் என்ன சொல்ல இயலும்?

போலந்து நாட்டிலும் தமிழர்கள் தஞ்சம்

கலவரத்தில் பாதிக்கப்பட்ட 40 பேர் வார்ஸோவில்

வார்ஸோ, பெப். 2

போலந்து நாட்டில் 40 இலங்கைத் தமிழர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வார்ஸோ நகரில் உள்ள தேவாலயம் ஒன்றில் 20 தமிழர் தங்க இடமளிக்கப்பட்டுள்ளது.

மிகுதி 20 பேருக்கு செஞ்சிலுவைச் சங்கம் இடவசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

40 இலங்கைத் தமிழரும் போலந்தில் தங்க, அரசு தற்காலிக விசா வழங்கியுள்ளது.

நவம்பர் 25 இல் இலங்கையில் இருந்து புறப்பட்ட இந்தத் தமிழர்கள், உள்நாட்டுக் கலகத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று வார்ஸோவில் தெரிவிக்கப்பட்டது.

ஏரோபுளட்டில் மாஸ்கோ போய்ச் சேர்ந்த இவர்கள் பின்னர் ஹங்கேரி தலைநகரான புடாபெஸ்ற் வந்தனர். அங்கிருந்தே வார்ஸோ சென்றனர்.

இரு குழுக்களாக இவர்கள் வார்ஸோவில் தங்கியுள்ளனர்.

தேவாலய திருச்சபை, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன இவர்களின் நலன்களைக் கவனிக்கின்றன.

இன்று பிரஜைகள் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 3

நெடுந்தீவு பிரஜைகள் குழுவின் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதன் தலைவராகக் கடமையாற்றிய அருட்திரு. பி. சகாயநாதன், பதில் தலைவர் வண போதகர் தியாகராசா ஆகியோர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் புதிய தலைவர்க்கான தேர்தல் இடம் பெறும்.

பாதுகாப்புப் படையினரின் இனப்படுகொலை, பாதுகாப்பு வலயத்தை உடனடியாக அகற்றக் கோரும் தீர்மானம் ஆகிய பல்வேறு தீர்மானங்கள் ஆகிய நிறைவேற்றப்படவுள்ளன.

சித்த மருத்துவத்தில் கலப்படம்; வேண்டாம் என்கிறார் துணைவேந்தர் வித்தி

யாழ்ப்பாணம், பெப். 3

அரைவேக்காட்டு மேலைநாட்டு வைத்தியத்தைக் கலப்படஞ் செய்யாமல், சித்த மருத்துவத்தைத் தனித்துவமாகக் கையாள வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் முதலாண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானி விழாவுக்கு தலைமை வகித்தார். சித்த மருத்துவ மாணவர் மன்றத் தலைவர் செல்வி ரி. வசந்தி வரவேற்புரை கூறினார்.

கற்றுத் துறைபோகிய சித்த மருத்துவர்கள்கூட மேலைநாட்டு வைத்திய முறைகளைக் கையாளும் வழக்கம் நம்மிடையே காணப்படுகிறது. இது இவர்களின் சோம்பலே அன்றி வேறல்ல.

ஏனெனில், நல்ல சிகிச்சை இயல்புகள் உள்ள மூலிகைகள் கிராமங்களிலும், நோயாளரின் சூழலிலும் காணப்படுகின்றன. அவை இலகுவில் பெறக்கூடியவை.

மேலை நாடுகள் கூட இன்று மூலிகை மருத்துவத்தில் ஈடுபாடு கொண்டுள்ளன. மூலிகை மருத்துவம் சம்பந்தமாக மேலை நாடுகளில் சிறந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. வி. என். சிவராசா, சித்த மருத்துவத்துறையின் தரத்தை மேலும் உயர்த்தும் நோக்குடன் பட்டப்பின் படிப்புக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார்.

சித்த மருத்துவத் துறைக்குத் தனியான மூலிகைத் தோட்டமும் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

டாக்டர் எஸ். பவானி தமது தலைமை உரையில் கூறியதாவது:-

ஆடிக் கலவரத்தினால் பாதிப்பு அடைந்து, யாழ்ப்பாணம் வந்த சித்த வைத்தியத்துறை மாணவர்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து, துணைவேந்தரின் முயற்சியினால் சித்த மருத்துவத் துறை ஆரம்பமானது.

கலைப்பீடாதிபதி திரு. என் பாலகிருஷ்ணன், பேராசிரியர் ஏ. வேலுப்பிள்ளை, அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், கலாநிதி இ. பாலசுந்தரம், தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

செல்வி ப. விக்கினவேணி நன்றியுரை கூறினார்.

கல்வி போதனாமுறை 25 ஆண்டுகள் பின்னணியில்
கல்வி அதிகாரி தெரிவித்த தகவல்

யாழ்ப்பாணம், பெப். 3

வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது நமது கல்வி போதனாமுறைகள் இருபத்தைந்து ஆண்டுகள் பின்தங்கி உள்ளன.

இதனை ஈடுசெய்ய ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நமது மாணவர்கள் நலன்கருதி இப்பணியில் சேவையுணர்வுடன் ஈடுபடவேண்டும்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சமூகக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் போதிக்கும் ஆசிரியர்களின் சேவைக்கால வகுப்பு ஆரம்ப வைபவத்தில் திரு. ஈசுரபாதம் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொய்யாமொழி

குறள்:

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்.

பொருள்:

தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது, யாழின் இசை இனியது என்று கூறுவர்

யாழ்ப்பாண மாவட்டம்; 12ஆயிரம் ஹெக்டரில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், பெப். 3

நடப்பு வருடத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 12, 503 ஹெக்டர் காணியில் நெற்செய்கை நடைபெற உள்ளது.

இதனால் 18,300 மெட்றிக் தொன் நெல் உற்பத்தியாகும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

நடப்பாண்டு யாழ் மாவட்ட விவசாய செயற்படு திட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யாழ் செயலகம் தயாரித்து உள்ள இத்திட்டத்தில் காணப்படும் ஏனைய தகவல்கள் வருமாறு:-

2,753 ஹெக்டர் காணியில் 4,133 மெற்றிக் தொன் மிளகாயும், 4,819 ஹெக்டர் காணியில் 71,315 மெற்றிக் தொன் வெங்காயமும், 119 ஹெக்டர் காணியில் 1,190 மெற்றிக் தொன் பம்பாய் வெங்காயமும் 443 ஹெக்டர் காணியில் 532 மெற்றிக் தொன் சோளமும், 1.489 ஹெக்டர் காணியில் 29,780 மெற்றிக் தொன் மரவெள்ளியும் உற்பத்தி செய்யப்பட உள்ளன.

யாழ் மாவட்டத்தில் சாவகச்சேரி, நல்லூர், வேலணை, தொல்புரம், கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, அம்பன், கைதடி, நீர்வேலி, புங்குடுதீவு ஆகிய பன்னிரண்டு இடங்களில் உள்ள [illegible] கள் ஊடாக இச்செயற்படு திட்டம் அமுலாக்கப்படும்.

தேவார, திருவாசக மனனப் போட்டிகள்
நல்லை ஆதீனம் ஒழுங்கு

யாழ்ப்பாணம், பெப். 3

தேவார, திருவாசகமனனப்போட்டிகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடத்த நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

திருமுறை முற்றோதல் விழாவை ஒட்டி இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இரண்டு போட்டிகளாக இவை நடத்தப்படும்.

1-ஆவது போட்டி

அகத்தியர் தேவாரத் திரட்டு நூலில் உள்ள அப்பர், சுந்தரர், ஞான சம்பந்த நாயன்மாரிகளின் திருப்பதிகங்கள்.

2-வது போட்டி:

மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம், சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் மேற்குறிப்பிடப்பட்ட பதிகங்கள் மனனஞ் செய்ய வேண்டும்.

ஒருவர் விரும்பினால் இரண்டுபோட்டிகளிலும் பங்கு பற்றலாம்.

மனனஞ்செய்து ஒப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வெண்பொற்பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

14-4-1966க்குப் பின் பிறந்தவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுவிலில் ஆரம்ப சுகாதார நிலையம்

சாவகச்சேரி, பெப். 3

மட்டுவில் வடக்கில் ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. ஐங்கரன் மாதர் சங்க ஆதரவில் இடம் பெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி திரு. கே. நடராசா நிலையத்தைத் திறந்து வைத்தார்.

திரு. கா. சின்னத்துரை தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. அங்கு சுகாதார பரிசோதகர் திரு. செல்வபாஸ்கர துரைநாயகம், திரு. எஸ். எம். அருளம்பலம், திருமதி. ஏ. பழனி, திருமதி. ப. மனோகரன் முதலானோர் உரை நிகழ்த்தினர்.

காந்தியின் முன்மாதிரி வாழ்க்கைக்கு வழிகாட்டி
இளம் சைவப்புலவர் உரை

நல்லூர், பெப். 3

அஹிம்சை, அன்பு, உண்மை, நேர்மை, சத்தியம் ஆகிய பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தார் மகாத்மா காந்தி. அவரின் முன்மாதிரியைப் பின்பற்றி நாம் எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ். நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்ற மகாத்மா காந்தி நினைவு தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றிய இளம் சைவப் புலவர் இ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் பத்மா சோமகாந்தன் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்.

ஸ்ரீதரன் தொடர்ந்து சொன்னதாவது:

மாணவர்களாகிய நீங்கள் எல்லோரும் பொய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சிநகர்ப் பேரறிஞன்

இன்று பேரறிஞர் அண்ணாதுரையின் 17 ஆவது நினைவு தினம் இன்று. அண்ணாவின் மறைவையடுத்து குருவிக்கரம்பை ஏ. சண்முகம் எழுதிய ''அண்ணாவுடன் ஒருநாள்'' என்ற கவிதையின் சில பகுதிகள் பேரறிஞரின் நினைவாக இன்று இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

பார்த்தாயா எங்கள் பதைபதைப்புப் பேரிருட்டை
புன்னகைப்புப் பேரரசன் புதுநகைப்புக் காட்டாமல்
பொன்னிழைத்த மெத்தையிலே புலன் அடங்கித் தூங்குகிறான்!
பனிவிரிப்புப் பேச்சரசன் பதிலிறுக்க மாட்டாமல்
துணிவிரிப்பு மெத்தையிலே துயர்விரித்துத் தூங்குகிறான்!

கனியமைப்புச் சொல்லரசன் கண்ணிமைப்புக் காட்டாமல்
தனியமைப்பு மெத்தையிலே தலையமைத்து தூங்குகிறான்!
தானைப் படைமறவன் தம்பியரின் செஞ்சிறைவன்
மான மறத்தமிழன் மனம் அடங்கித் தூங்குகிறான்!
அச்சடித்த பொன்முகத்தில் அமைதி அரசாளப்
பிச்சிமலர்ப் பேச்சிதழைப் பிரிக்காமல் தூங்குகிறான்!
ஈரோட்டுத் தந்தையுடன் இளையமக்கள் நின்றழுக
தாரோட்டச் சொற்பொழியும் தலைமகனும் தூங்குகிறான்!
தூங்குகிறான் எங்கள் துரைமகனும் தூங்குகிறான்!
பாங்குதமிழ்த் தெம்மாங்குப் பாட்டரசன் தூங்குகிறான்!

குயிலே உனக்கினிமேல் குரலுக்குப் போட்டியில்லை
மயிலே உனக்கினிமேல் மணிநடைக்குப் போட்டியில்லை!
பொன்தமிழன் வாழ்வைப் புதுப்பிக்க வந்த சிற்பி
இன்சொற் புலத்துழவன் இறுதிஉலாத் தொடங்கிவிட்டான்!
நெட்டுயிர்ப்பு மொட்டவிழ்த்து நெளியும் சனக்கடலில்

நாக்கு முரசறைந்து நாடாண்ட செந்தமிழன்
போக்கொழியச் செத்துவிட்டான் என்று புலம்பாதீர்!
தென்னாட்டுப் பொன்னேட்டை - சித்திரச் சொல் முத்திரையை-
என்ன விதமாக இறந்துவிட்டான் என்றுரைத்தீர்?
இனம்பேச வாழும் இளந்தலைவன் தூங்குகிறான்!

மனம்பேச வாழும் மறத்தலைவன் தூங்குகிறான்!
சாகவில்லை எங்களண்ணன் சத்தியமாய்த் தூங்குகிறான்!
ஏகவில்லை எங்களண்ணன் ஒய்வுகொள்ளத் தூங்குகிறான்!
முதியதமிழ்த் தங்கைகளே மூத்த அண்ணன் உங்களுக்குப்
புதியசீர் வாங்கிவரப் போகின்றான் புலம்பாதீர்!

பொங்கிவரும் தேனருவி! பூத்துவந்த புது நிலவு!
தங்கமணிச் சங்கொலி தலைவாநின் அன்பு மொழி!
என்பதனை நீண்ட கடற்கரையின் மணல் வெளியும்
பொன்மாலைச் சிறுபொழுதும் புவியோர்க்குச் சொல்லிவரும்!

சடசடவென் றேயடித்துச் சதிரிட்ட புயற்காற்றில்
மடமடவென் றேமரங்கள் முறிந்துவிழும் இராப்பொழுதில்
வாழ்க்கை கனவாக வயல்வெளியும் கடலாக
யாக்கை குளிராலே நடுநடுங்க நின்றிருந்தோம்!

பிறைநிலவின் வடிவான ஓடத்தில் செல்லுகையில்
சிறகொடிந்த பறவையெனச் செய்துவிடச் சிறிவந்த
பெரும்புயலால் மீனவர்கள் பெற்றதுயர் நீயறிந்து
கரும்பாக நின்வாயில் கனிந்தமொழி ஆறுதலாய்

உண்ண உணவுடனே உடுக்க உடைஅளித்த தாய்
அண்ணாவே! ஆலயமே! அன்பொளியே....நீ வந்தே
அந்நாளில் எங்கள் அழுகுரலைத் தனித்தாயே
அந்த ஒருநாளை ஆவி இருக்கும்வரை
இந்தக் கடலோர இதயங்கள் மறக்காது!

கடற்கரையே.. கடற்கரையே... காஞ்சிநகர்ப் பேரறிஞன்
கடல்நீரில் செல்பவர்தம் கண்ணீரில் பங்குபெற
இடம்தேடி முடிவாய்இங் குனைநாடி வந்தானோ?
உடம்பினையும் கடைநாளில் உனக்கென்று தந்தானோ?

சித்திரப் போட்டி

அம்பாறை, பெப் 3

ஆண்டுதோறும் நடத்தப்படும் அகில உலக சர்வதேச சித்திரக் கண்காட்சியின் 28ஆவது போட்டி எதிர்வரும் (1986) செப்டம்பர் மாதம் கொரியா நாட்டின் 'சியோல்' நகரத்தில் நடைபெறவிருக்கின்றது.

சகல இனத்தவருக்கும் உரிய கலாசார நட்புறவை விரிவடையச் செய்தல், சகல இனத்தவருக்கிடையேயும் நட்புறவையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துதல், எல்லா இனத்தவரும் பங்குகொள்ளும் சிறுவர் சித்திரத்தை சர்வதேசரீதியில் கொடுக்கல் வாங்கல்செய்தல், சிறுவர்களது கலைக்கல்வியை அபிவிருத்தி செய்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு இந்தப் போட்டி நடத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

NATIONAL CERTIFICATE IN ENGLISH
பரீட்சைக்குரிய வழிகாட்டி.
* விரிவானது * விளக்கமானது
* தரமான பயிற்சிகள்
* கட்டுரைகள் * கடிதங்கள் அடங்கியது.
ஆக்கம்: த. ந. பஞ்சாட்சரம்
விலை: ரூபா 45-00
யாழ். நகரின் முன்னணி புத்தக நிலையங்களில் பெறலாம்.

உதயன்

03. 02. 1986

NATIONAL CERTIFICATE IN ENGLISH
பரீட்சைக்குரிய வழிகாட்டி.
* விரிவானது * விளக்கமானது
* தரமான பயிற்சிகள்
* கட்டுரைகள் * கடிதங்கள் அடங்கியது.
ஆக்கம்: த. ந. பஞ்சாட்சரம்
விலை: ரூபா 45-00
யாழ். நகரின் முன்னணி புத்தக நிலையங்களில் பெறலாம்.

கூலிப்படையுடன் வில்லிஸ் தொடர்பு

விசாரணையின் பின் ஈரோஸ் அறிக்கை

சென்னை, பெப். 2

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் மருமகள் பெனி ஜயவர்த்தன சிபார்சு செய்தார். அமைச்சர் அத்துலத்முதலி அனுமதி தந்தார். அதனால் தான் வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கு நான் விஜயம் செய்யக் கூடியதாக இருந்தது.

இப்படிப் பிரிட்டிஷ் பெண்மணி வில்லிஸ் பெனிலோப் தெரிவித்ததாக ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) சென்னையில் அறிவித்தது.

17–1–86 இல் முல்லைத்தீவில் வைத்து இவர் ஈரோஸ் இயக்கத்தினரால் கடத்தப்பட்டார். இன்று வரை இவரைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

ஈரோஸ் இயக்கம் இவரை விசாரணைக்குட்படுத்தியது. அச்சமயம் அவர் வெளியிட்ட தகவல்களை ஈரோஸ் இயக்கம் கேள்வி பதிலாக சென்னையில் வெளியிட்டது.

அதில் முக்கியமான பதில்கள் வருமாறு:-

கேள்வி: உங்கள் பெயர், கணவர் பெயர், தொழில் விவரங்கள் என்ன?

பதில்: என் பெயர் வில்லிஸ் பெனிலோப், வயது 64. எனது கணவர் பெயர் வில்லிஸ் கரோல் அன்ரனி. இங்கிலாந்தில் இருக்கின்றார்.

2 ஆம் உலக மகாயுத்தத்தில் விமானப்படை வீரராக அவர் பணி புரிந்தார்.

கேள்வி: உங்கள் வருகையின் நோக்கம் என்ன?

பதில்: நான் உல்லாசப் பயணியாக இங்கு வந்தேன். இங்குள்ள மக்கள், அவர்களின் பிரச்சினைகள் பற்றி அறியும் ஆவலில் வந்தேன்.

கேள்வி: நீங்கள் பத்திரிகையாளரா? புனை பெயர்கள் உண்டா? 'ட்ரெமியின்' என்ற புனை பெயரில் நீங்கள் கட்டுரை எழுதியதாக அரசுச் செய்திகள் கூறுகின்றனவே!

பதில்: நான் பத்திரிகையாளர் இல்லை. சில காலத்துக்கு முன்னர் சில கட்டுரைகள் எழுதியிருந்தேன்.

கூடுதலாக சைப்பிரஸ் மக்கள், அங்குள்ள போர் உத்திகள், கிராமத்து மக்கள், அவர்கள் மத்தியில் உள்ள இயக்கங்களைப் பற்றித் தான் எழுதினேன்.

'ட்ரெமியின்' என்ற புனை பெயரில் எழுதியதாகக் கூறப்படுவது பச்சைப் பொய்.

போர் முறைகளைப் பற்றியும் விடுதலை இயக்கங்களைப் பற்றியும் அறிவதில் ஆர்வம் இல்லை. கிராமமக்களின் வாழ்க்கையை பற்றி ஆராய்வதில் மட்டுமே ஆர்வம் உண்டு.

கேள்வி: பிரிட்டனில் உள்ள ஏதாவது பாதுகாப்புக் கல்வித் துறையினருடன் தொடர்பு உண்டா?

பதில்: இல்லை. எனக்கு இத்துறையில் ஆர்வம் இல்லை.

(Royal United Services For Defence என்ற நிறுவனத்தின் அட்டையைக் காண்பித்ததும்)

ஆம் எனக்கு இந்த நிறுவனத்துடன் தொடர்புண்டு. ஆனால் எனக்குப் பாதுகாப்புத் துறை பற்றியோ உளவுத் துறை பற்றியோ ஆர்வம் இல்லை.

எஸ். ஏ. எஸ்ஸின் ஆரம்பகர்த்தாவான கொமாண்டர் ஸ்ரேலிங்கின் குடும்பத்துக்கும் எனது குடும்பத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

கேள்வி: இலங்கைக்கு எப்போது வந்தீர்கள்?

பதில்: இது 3 ஆவது விஜயம். 11–1–1986 இல் வந்தேன். 1985 மே மாதம் முதலில் வந்தேன். 1985 செப்டம்பரில் இரண்டாவது தரம் வந்தேன்.

இந்த விஜயத்தின் போது கொழும்பில் இருந்து அனுராதபுரம் வந்து முல்லைத்தீவு ஊடாக புல்மோட்டைக்கும் திருமலைக்கும் செல்ல முயன்ற போது உங்களிடம் அகப்பட்டுக் கொண்டேன்.

கொழும்பில்அமைச்சர் அத்துலத் முதலி, வீரசூரியா, ஜெனரல் சிறில் ரணதுங்க, பெனி ஜயவர்த்தன (ஜனாதிபதியின் மருமகள்)செல்வி டிமெல், ஜெனரல் ஆட்டிகலை ஆகியோரைச் சந்தித்தேன்.

அமைச்சர் அத்துலத் முதலியுடன் 20 நிமிடம் வரை பேசி இருப்பேன்.

தனது இராணுவம் வலிமைபெற்றுள்ளதுஎன்றும் பயங்கரவாதிகளை விரைவில் அடக்கி விடுவார் என்றும் அவர் சொன்னார்.

''வடக்கு – கிழக்கு மாகாணங்களில் குழப்ப நிலை உள்ளது.வடபகுதி எமது கட்டுப்பாட்டில் இல்லை. இவற்றைச்சீரமைக்க உங்களைப் போன்றவர்களின் ஆலோசனை எனக்கு அவசியம்'' இப்படி அமைச்சர் அத்துலத் முதலி என்னிடம் சொன்னார்.

வடபகுதிக்கு நான் செல்ல வேண்டும் என்று கேட்டேன்.

''அங்கு செல்வது அபாயகரமானது. உங்கள் திறமையைப் பயன் படுத்திச் சென்று பாருங்கள்'' — இப்படி அமைச்சர் சொன்னார்.

இந்த ஆண்டு செப்டம்பருக்குள் இராணுவத் தீர்வில் வெற்றி கண்டு விடுவோம்என்றும் அமைச்சர் சொன்னார்.

1985வரைஇராணுவம் ஒழுங்கற்ற, ஒழுக்கக்கேடாக ஈடுபட்டிருந்ததை ஒப்புக் கொண்ட அமைச்சர், தற்சமயம் கட்டுப்பாடாக இயங்குவதாகக் கூறினார்.

எனக்கும் எஸ் ஏ எஸ். க்கும் எவ்விததொடர்பும் இல்லை.

கேள்வி: நீங்கள் கொழும்பில் இருந்து முல்லைத்தீவு வரை எப்படி வந்தீர்கள்?

பதில்: நான் கொழும்பில்இருந்துஅனுராதபுரம் வரை வாடகைக்கு அமர்த்தியகாரில்சிங்களச் சாரதி ஒருவருடன் வந்தேன்.

அனுராதபுரத்தில் இருந்துவவுனியாவூடாக முல்லைத்தீவு வரை சாரதி இன்றி நானே தனித்துக் காரை ஓட்டி வந்தேன்.

கேள்வி: இடையில் உள்ள சோதனைத் தடைகளை எப்படி கடந்தீர்கள்?

பதில்: இத்தடுப்பு முகாம்களைக் கடப்பதில் எனக்கு எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. என்னை எவரும் சோதனை இடவும் இல்லை; விசாரணை செய்யவும் இல்லை. முகாம்களைக் கடக்கும் போது நான் காரைநிறுத்தகூடவில்லை.

(இவர் அனுராதபுரத்தில் இருந்து முல்லைத்தீவு வரை இராணுவத் தொடர் வண்டிகளோடு பயணம் செய்ததை நாம் நேரில் அவதானித்து இருந்தோம்).

கேள்வி: தேசிய புலனாய்வுத்துறையில் உள்ள யாரையும் உங்களுக்குத் தெரியுமா?

பதில்: இல்லை. எவரையும் எனக்குத் தெரியாது. இப்படி ஒரு நிறுவனம் இருப்பதும் தெரியாது.

(இக்கட்டத்தில் தேசிய புலனாய்வுத்துறை உதவிப் பணிப்பாளரின் 'விசிட்டிங்'கார்ட் அவரிடம் காண்பிக்கப்பட்டது. அந்தக் கார்ட்டை கழிவுக் கடதாசிகளுடன் மறைத்து வைத்து இருந்தார்.அட்டையைக் காட்டியதும் அவர் பரபரப்படைந்தார். இது எப்படி வந்தது என்பது தனக்குத் தெரியாது என்று கடுமையாக எதிர்த்தார்).

பிரிட்டிஷ் தூதரகத்துக்கு நான்செல்லவில்லை. அவர்களில் எவரையும் எனக்கு தெரியாது.அவர்கள் எவரையும் சந்திக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

கேள்வி: விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் எவரையும் சந்தித்தீர்களா?

பதில்: ஆம். முல்லைத்தீவில் சிலரைச் சந்தித்தேன். எந்தஇயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்ற விவரம் தெரியாது. அவர்கள் பலவிடயங்களை எனக்குத் தெரிவித்தார்கள்.

வித்தாரம்

என்ன முரளி! பத்திரிகைகளைக் காலையிலை பாத்திருப்பாய். இந்தியாவிலை இருந்து இண்டைக்கு வரஇருந்த பண்டாரி மாமா வரமாட்டாராம்.

எங்கடை இலங்கை வானொலி, அவர் ஏன் வரயில்லை எண்டதற்கான காரணத்தை சரியாய்ச் சொல்லாமல் விழுங்கி விட்டுது.

அவர் வராமல் இருக்கிறதுக்கும் பல காரகாரணங்கள் இருக்கு. அதுகளை உதயன் முதலாம் பக்கத்திலை படித்திருப்பாய். பிறகு ஏன் நான் என்ரை நேரத்தைப் பழுதாக்குவான்.

இலங்கை அரசாங்கத்தின்ரை பதில் இந்தியாவுக்குக்கூட திருப்தி தரயில்லை எண்டதுதான் உண்மையான காரணமாய் இருக்கவேணும் எண்டு நான் நினைக்கிறேன்.

இலங்கை அரசாங்கம் பிறகும் மாவட்டத்திலை தான் வந்துநிக்குது எண்டு இந்தியாவோடை நெருங்கிய வட்டாரங்கள் எனக்கு இரண்டு மூண்டு நாளைக்கு முன்னமே சொல்லிப்போட்டினம். அது சரியாய்ப் போச்சு.

நான் முந்தி ஒருக்காச் சொன்னதுபோலை, இஞ்சை தமிழ்த் தலைவர்களோடை விட்ட சேட்டையளை இந்தியாவோடையும் விடப்பாக்கினம் போலை. உந்தப் புலுமாசு அவியாது. நீ இருந்துபார். அமெரிக்கா தங்கடை பக்கம் நிக்குது தானே எண்ட இறுமாப்பிலையும் திமிரிலையும் இந்தியாவோடை நுள்ளி விளையாடப் பாக்க நினைக்கினம் போலை.

* *

தமிழர் கூட்டணியின் குறைந்தபட்சக் கோரிக்கையைக் கூட, இலங்கை அரசாங்கம் ஏற்காததால் இப்ப இந்திய அரசு வெளிப்படையாகத் தமிழ் ஆக்கள் பக்கம் நிப்பினம் எண்டு சிலபேர் ஊகிக்கினம்.

இதுக்கு ஒரு காரணம் அமிர் – ராஜீவ் ஆகாசப் பயணம்தான் எண்டும் சொல்லுகினம்.

உப்பிடித்தான் தொண்டமான் – ராஜீவ் ஆகாசப்பயணம் செய்ததாலை தொண்டமானுக்கு வெற்றி கிடைச்சுது. 4 லட்சம் பேருக்கு குடியுரிமை வாங்கிக் குடுக்க முடிஞ்சுது,

அப்பிடித்தான் இந்தியாவோடை எதிரும் புதிருமாக இருந்து வந்த ஜே. ஆர் ராஜீவோடை பங்களாதேசத்துக்கு ஆகாசப்பயணம் செய்த பிறகு நல்ல உறவுநிலை வந்தது.

ராஜீவ் முந்தி ஒரு பைலட்டாக இருந்தவர். இப்ப இந்தியாவின் அரசியல் பைலட். இரண்டு வல்லரசுகளுக்கும் அடுத்த இடம் இந்தியாவுக்குத் தான் கிடைக்கும் எண்டு உலக அரசியல் அவதானியள் எல்லாம் சொல்லுகினம். அப்பிடிக்கொத்த ஒரு 'பைலட்' தலைவரோடை ஆகாசப்பயணம் செய்யிறவைக்குச் சாதகமான பலன்கள் கிடைக்கும் எண்டு ஒரு புதுச்சோதிடம் சொல்லலாம்போலை.

அப்பாவித் தமிழர் . . .

(1-ம் பக்க தொடர்ச்சி)

சென்னை வந்து சேர்ந்தார்.

திரு. பண்டாரி வந்த அதே விமானத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திரு. அ.அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு, இரா. சம்பந்தன் ஆகியோரும் சென்னை வந்தனர்.

திரு. பண்டாரியுடன் வெளியுறவு இணைச்செயலாளர் திரு ரஞ்சன் மத்தாயும் வந்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் போராளிகளின் நான்கு அமைப்புக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் திரு. பண்டாரி தனித்தனியே பேச்சுக்கள் நடத்தினர்.

''இனப் பிரச்சினைக்கு அரசியல் உடன்பாடு ஒன்றே காணவேண்டும். போர் நிறுத்த உடன்பாட்டை எவ்வாறு பயன் மிக்கதாக மாற்றலாம் என்பது பற்றியும் போராளிகளுடன் பேச்சுக்கள் நடத்த உள்ளேன்''— இப்படி திரு. பண்டாரி சொன்னார்.

முக்கிய அம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு தனது பதிலில் முற்ருக நிராகரித்து விட்டது.

மாவட்ட ரீதியில் என்ன அதிகாரங்களை வழங்குவது பற்றி ஆராய அரசு தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இலங்கை அரசின் பதிலை, தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தான் தயாரித்து அனுப்பினார் என்றும் தெரியவருகிறது.

அந்தச் சிறுவனுக்கு..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

உயிர் தப்பிய தகப்பனும் மகனும் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிசசை பெற்று வருகின்றனர். தகப்பன் படுகாயமடைந்த நிலையில் இருக்கிறார்.

5 வயதுப பாலகன் கமலதாஸின். மேல் இரக்கப்பட்டு பார்வையாளர்கள் இவனுக்கு நிதி உதவி செய்தனர். இப்படிச் சேகரித்தபணம் சிறுவனின் சட்டைப் பையினுள் இருந்தது.

கடந்த வெள்ளி இச்சிறுவன் இயற்கைக் கடனைக் கழிக்கச் சென்ற சமயம் சிறுவனின் சட்டைப் பையினுள் இருந்த பணமும் மாயமாய் மறைந்து விட்டது.

பணம் காணாமற் போனதைப் பாலகன் தந்தையிடம் சொல்லி அழுதது மிகவும் பரிதாபமான காட்சியாக இருந்தது.

பண்டாரியின் . . .

(1–ஆம்பக்க தொடர்ச்சி)

முறையில் இலங்கை அரசு பரிசிலனை செய்ய வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பண்டாரி கருத்து

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனைகளுக்கும் அதற்கு இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள பதிலுக்கும் இடையே பெரிய இடைவெளி உண்டுஎன்று திரு.ரொமேஷ் பண்டாரியும் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமது இலங்கைவிஜயம் திடீரென்று ஒத்திவைக்கப்பட்ட பின்னர் திரு. பண்டாரி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போதேஅவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு இலங்கை அரசாங்கம் 29 பக்கத்தில் நகல் திட்ட யோசனைகளைச் சமர்ப்பித்திருந்தது.

அதற்குப் பதிலாக தமிழர் விடுதலைக் கூட்டணி [illegible] பக்கங்களில் மாற்று யோசனைகளைச் சமர்ப்பித்தது.

இலங்கையின் பதில் 57 பக்கங்களில் உள்ளது.

காந்தியின்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லுவதாகிய பாவத்தை விடுத்து உண்மையே பேசவேண்டும்.

காந்திக்கு விழா எடுப்பதோடு நின்று விடாமல் அவர் காட்டிய அஹிம்சைப் பாதையிலும் வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்வதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறு ஆகும்.

இப்படி அவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் காந்தி கீதமும் உரைகளும் இடம் பெற்றன.

விளையாட்டரங்கு

ஒலிம்பிக் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டம்

ஊரெழு றேயல் சாம்பியன்!

நாவாந்துறை சென்மேரிஸை வென்றது

— விளையாட்டுச் செய்தியாளர்: சண். ஜோன்சன் —

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட 'நொக் அவுட்' முறையிலான உதை பந்தாட்டப் போட்டியில் ஊரெழு றேயல் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது.

றேயல் விளையாட்டுக் கழக அணி நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை 2–க்கு 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சாம்பியனாகியது.

நேற்றைய ஆட்டத்தில் இடை வேளை வரை சென். மேரிஸ் அணி ஒரு கோலைப் போட்டு முன்னணியில் திகழ்ந்தது.

இடைவேளையின் பின் சிறப்பாக ஆடிய றேயல் அணிஇரண்டு கோல்களைப் போட்டு வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

சென். மேரிஸ் அணி வீரர் ரி. மரியதாஸ் (மணி) சிறப்பாக ஆடினர்.

றேயல் அணி வீரர்கள் வி. தர்மகுலநாதன் (வெள்ளை), எஸ். அருணன், கோல் காப்பாளர் ஜி. ராஜ்குமார் ஆகியோர் சிறப்பாக ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றனர்.

இறுதி ஆட்டத்துக்கு முன்னதாக நடைபெற்ற — மூன்றுவது இடத்தைத் தெரிவு செய்வதற்கான — போட்டியில் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய நாவாந்துறை சென். நிக்கலஸ் விளையாட்டுக் கழக அணி 2-க்கு 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

றேயல் அணி முதலாம் பரிசான ஆயிரம் ரூபாவையும் சென். மேரிஸ் அணி இரண்டாம் பரிசான ஐந்நூறு ரூபாவையும், சென். நிக்கலஸ் அணி மூன்றும் பரிசான இருநூற்று ஐம்பது ரூபாவையும் பெற்றுக் கொண்டன.

யாழ். கிறீன் பீல்ட் அணிக்கு நாலாம் பரிசாக ஒரு உதை பந்து வழங்கப்பட்டது.

யாழ். உதை பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப் வழங்கினர்.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை விளையாட்டுத் தலைவர் எஸ். வி. பரமராஜா செய்திருந்தார்.

உலகக்கிண்ண ஆட்டம்

இறுதிச் சுற்றுக்கு இந்தியா தகுதி

தாஸ்மேனியா, பெப்.3

உலகக் கிண்ணத்திற்கான ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ''பென்ட்சன் அன்ட் ஹெட்ஜஸ்'' மும்முனை போட்டியில் இறுதிச் சுற்றில் விளையாடுவதற்கு இந்தியா தகுதி பெற்றது.

இறுதி சுற்றில் ஆஸ்திரேலிய, இந்திய அணிகள் மோதும்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இந்த மும்முனைப் போட்டியில் ஆஸ்திரேலிய, இந்திய, நியூஸிலாந்து அணிகள் மோதிக் கொண்டன.

முதற்சுற்று ஆட்டங்களிலிருந்து இறுதிச் சுற்றுக்கு தேர்ந் தெடுக்கப்படும் தகுதியை ஆஸி அணி ஏற்கனவே பெற்றுக் கொண்டுவிட்டது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய, அணி நியூஸிலாந்து அணியை தோற்கடித்ததன் மூலம் இறுதிச் சுற்றில் விளையாடும் சந்தர்ப்பத்தை ஒருவாறு தக்க வைத்துக் கொண்டது.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 48 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 45 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இந்திய அணி 45 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்களைப் பெற்றிருந்ததால், இந்திய அணி 21 ஓட்டங்களினால் ஆட்டத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தர்மபுரத்தில் 60....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் வட்டக்கச்சி, கல்மடு, தருமபுரம், இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் ஆங்காங்கே மோதல்கள் ஏற்பட்டன.

தர்மபுரம் பகுதியில் ஆயுதப்படையினர் நடைபவனியாக வந்தவேளையில் போராளிகள் அவர்களை நேருக்குநேர் எதிர்கொண்டதாகக் கூறப்படுகிறது.

நேரடித் தாக்குதலில் 6 பாதுகாப்புப் படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் 5 பேர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

படுகாயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு காயமடைந்தவர்களுக்கு அவசர சத்திர சிகிசசை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஹெலிக்கொப்டர்களும் சிறு விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டன. மோட்டோஷெல் தாக்குதலும் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இதனால் அந்தப் பகுதியில் சுமார் 60தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்பட்டது. பலர் காயமடைந்திருக்கிறார்கள்.

நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. கால்நடைகள் ஆங்காங்கே இறந்துகிடக்கின்றன.

இதேவேளை கல்மடுவில் புதைந்த வாகனங்களை ஆயுதப் படையினர் நேற்றுப் பிற்பகல் வரை மீட்கவில்லை.

ஆயுதப் படையினரின் குண்டுவீச்சுகளினால் தருமபுரம் தமிழ்க்கலவன்பாடசாலையின் ஒருபகுதி எரிந்து சாம்பராகியது.

தர்மபுரம், கல்மடுப் பகுதியில் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 150 பேர் படைச்சிப்பாய்களினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்துபேர் நேற்றைய ஊரடங்கு வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

கூட்டணியின் நிலைபற்றி பி. பி. சியின் செய்தி

லண்டன், பெப். 2

இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் நாம் மாற்று யோசனைகளைச் சமர்ப்பித்தோம். [illegible] தீர்வுகள் பேச்சுக்கள் மூலம் வரும் என்ற நம்பிக்கை எமக்கு கிடையாது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடம் கருதுவதாக 'பிபிசி' அறிவித்தது.

'பிபிசி' வானொலி செய்தியாளர் ஹம்ப்ரி ஹக்ஸ்லி 'பண்டாரியின் இலங்கை விஜயம் திடீர் ஒத்திவைப்பு' பற்றிய செய்தியில் இத்தகவலை வெளியிட்டார்.

எங்கள் தேவை

பால்மாடு தேவை

விற்பனைக்கோ அல்லது மாற்றவோ பால் வற்றிய மாடுகள் உண்டு. தொடர்பு: 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24398

உடுவில் மகளிர் கல்லூரி
(FURTHER EDUCATION PROGRAMME)
பயிற்சி நெறி

1. I.A.B. — Preliminary, Intermediate, Final
2. HOME ECONOMICS — Dress Making, Flower Making, Cake Making & Icing.
3. NATIONAL CERTIFICATE IN ENGLISH
4. PITSMAN SHORT HAND TYPING

விடுதி வசதி உண்டு.
ஆரம்ப திகதி: 5—2—86
உடுவில், சுன்னாகம்.
இயக்குநர்
உடுவில் மகளிர் கல்லூரி.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 03-02-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org